# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1368/13 - 2004 නොවැම්බර් 23 වැනි අඟහරුවාදා - 2004.11.23

*1368/13 ஆம் இலக்கம் – 2004 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க, பல்கலைக்கழகச் சட்டத்தின் *21* ஆம், *139* ஆம் பிரிவுகளுடனும் அரசியலமைப்பின் *44 (2)* ஆம் உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது 1986, செத்தெம்பர் *29* ஆம் திகதிய *420/25* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை இக்கட்டளையின் மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்:–

(1) பந்தி (V) இன் 2 ஆம் நிரையில், 1 ஆம் நிரையிலுள்ள விஞ்ஞானத்துறை என்பதற்கெதிராகக் காணப்படும் "புவியியல் பகுதி" என்னும் சொற்களை நீக்கிவிட்டு சொல்லப்பட்ட சொற்களை 2 ஆம் நிரையின் கீழ் "நுண்கலைக் கல்விப் பகுதி" என்பதனைப் பின்னால் சேர்ப்பதன் மூலமும் ;

(2) (அ) பந்தி (V) இன் 1 ஆம் நிரையில் "கலாசார கற்கைத் துறை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) பந்தி (V) இன் நிரை 2 இல் "புவியியல் பகுதி" என்னும் சொற்களை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் ;

"மொழிகள் பகுதி
சமூக விஞ்ஞானப் பகுதி"

(3) முறையே 1 ஆம் 2 ஆம் நிரைகளின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:–

| | |
|---|---|
| "சௌக்கியப் பராமரிப்பு விஞ்ஞானத்துறை | மனித உயிரியல் பகுதி (உடலமைப்பியல், உடற்றொழிலியல், உயிரிரசாயனவியல்) |
| | நோய் உடற்றொழிலியல் பகுதி (நோயியல் நுண்ணுயிரனவியல் ஒட்டுண்ணியியல், சட்ட மருத்துவம்) சாய்சாலை விஞ்ஞானப் பகுதி (மருத்துவம், அறுவை வைத்தியம், தாய் மருத்துவம், மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவ அறிவியல், மனநோயியல், ஔடதவியல், உடற்றொழில் நிழலுரு சாயல்) |

முதல்நிலை சுகாதாரப் பராமரிப்புப் பகுதி (சமூக மருத்துவம், குடும்ப மருத்துவம்) மருத்துவக் கல்வி, ஆராய்ச்சிப் பகுதி

இணை சுகாதார விஞ்ஞானப் பகுதி (தாதியியல், மருந்தகம், மருந்தாய்வு கூட தொழில்நுட்பம், ஊடுகதிர்படமெடுப்பு, இயன் மருத்துவம்)

*சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2004, நவெம்பர் 09*

*12-271*